2015

2015

102606

No. of Printed Pages : 3

**4951**

Register Number

**First Year**

# கற்கும் குழந்தை

# THE LEARNING CHILD

(Tamil Version)

நேரம் : 3 மணி | மொத்த மதிப்பெண்கள் : 100

**அறிவுரை :** (1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாக தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்குப் பயன்படுத்த வேண்டும்.

**குறிப்பு :** பகுதி II மற்றும் பகுதி III - ல் உள்ள வினாக்களுக்கு 1 வரிக்கு 5 வார்த்தைகள் வீதமும், ஒரு பக்கத்திற்கு 20 வரிகளுக்கு மிகாமலும் விடையளிக்க வேண்டும்.

## பகுதி - I

I. **அனைத்து** வினாக்களுக்கும் 100 வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளி. **15x2=30**

1. குழந்தையின் அறிதல் திறன் வளர்ச்சியின் படிநிலைகள் யாவை?

2. குறியீட்டுச் சிந்தனை என்றால் என்ன?

3. உடன்பாட்டுத் தற்கருத்தை வளர்க்கும் செயல்பாடுகள் ஏதேனும் இரண்டினைக் குறிப்பிடுக.

4. நுண்ணறிவு ஈவு என்பது யாது?

5. ஒப்பார் குழு என்றால் என்ன?

6. பள்ளிக்குச் செல்லும் குழந்தைகள் மீது சமூகத்தின் எதிர்பார்ப்புகளை பட்டியலிடுக.

7. ஒழுங்கு என்பதன் பொருள் யாது?

[ Turn over

8. குழந்தைகளின் இரண்டாம் பிறப்பு - சிறு குறிப்பு வரைக.

9. 'ஸ்கீமா' என்றால் என்ன?

10. முயன்று தவறிக் கற்றலுக்கு ஓர் உதாரணம் தருக.

11. பொதுமைக் கருத்து படங்கள் - சிறு குறிப்பு வரைக.

12. கற்றலுக்கு உதவக்கூடிய உளவியல் காரணிகளைக் குறிப்படுக.

13. புதிய அறிவை உருவாக்குவதற்கான இடம் - சிறு குறிப்பு வரைக.

14. குழந்தைகளிடையே அறிவை உருவாக்குவதற்கான கற்பித்தலில் ஆசிரியரது செயல்பாடுகள் ஏதேனும் இரண்டினைக் கூறுக.

15. குழந்தைகளின் உரிமைகள் யாவை?

## பகுதி - II

**II.** எவையேனும் **10** வினாக்களுக்கு **200** வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும். **10x4=40**

16. குழந்தையின் பேச்சு மொழியில் காணப்படும் குறைபாடுகள் யாவை? விளக்குக.

17. மாணவர்களின் மனவெழுச்சி வளர்ச்சியில் ஆசிரியர் தவிர்க்க வேண்டிய வகுப்பறைச் செயல்பாடுகளைக் குறிப்பிடுக.

18. தர்ஸ்டனின் நுண்ணறிவுக் கோட்பாட்டை விளக்குக.

19. மாணவர்களால் விரும்பப்படும் ஆசிரியர்களுடைய பண்பு நலன்களைக் குறிப்பிடுக.

20. குழந்தைகளின் ஒழுக்கத்தை வளர்ப்பதில் குடும்பத்தின் பங்கு யாது?

21. அறிதலை அறிந்துணர்தலின் முக்கியத்துவத்தைக் குறிப்பிடுக.

22. மொழியைக் கற்றலில் ஸ்கின்னரின் நடத்தைக் கொள்கையை விளக்குக.

23. தார்ண்டைக்கின் கற்றல் விதிகளை விளக்குக.

24. மாணவர்களிடம் பொதுமைக்கருத்துக்களைக் உருவாக்கும் திறனை மேம்படுத்த ஆசிரியர் மேற்கொள்ளும் செயல்பாடுகள் யாவை?

25. கற்றலில் கல்வி நுட்பவியலின் பயன்களைப் பட்டியலிடுக.

26. தச்சு வேலையில் பயன்படுத்தும் அறிவு நுட்பங்களைக் குறிப்பிடுக.

27. ஆக்கச் சிந்தனையின் மொழிச் சோதனைகளை விளக்குக.

## பகுதி - III

III. கீழ்க்கண்ட வினாக்களுக்கு **500** வார்த்தைகளுக்கு மிகாமல் விடை தருக. **3x10=30**

28. (அ) எரிக்சனின் மன - சமூக வளர்ச்சி நிலைகளில் தோன்றும் பிரச்சினைகளை விளக்குக.

**அல்லது**

(ஆ) மாணவர்களின் மனவெழுச்சி வளர்ச்சியில் தகவல் தொடர்பு ஊடகங்களின் தாக்கத்தை விளக்குக.

29. (அ) மாணவர்களுடைய ஒழுக்க வளர்ச்சியின் மூன்று நிலைகளை உதாரணங்களுடன் விளக்குக.

**அல்லது**

(ஆ) கற்றலில் கட்டமைப்புக் கொள்கையை விவரி.

30. (அ) கற்றல் - கற்பித்தல் செயலில் பொதுமைக் கருத்துப்படங்களின் பயன்களை விவரி.

**அல்லது**

(ஆ) மாணவர்களின் கற்றலைத் தீர்மானிக்கும் காரணிகளை விளக்குக.

-o0o-